# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 05.05.2025

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ◌ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 8653/SCIC/2023**

திரு. V.கணேசன், W/o. தங்கமாரி கணேசன் — மேல்முறையீட்டாளர்
எண்.299 A, M.R.நகர்
இராஜபாளையம் - 626 117
விருதுநகர் மாவட்டம்.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர் அலுவலகம்
கரிவலம்வந்த நல்லூர்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 28/03/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ சார் பதிவாளர், கரிவலம்வந்த நல்லூர் சார்பதிவகம், விருதுநகர் மாவட்டம்-க்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "W.P.(MD) No.148730/2019 and WMP (MD) 11376 of 2019, dated 21-02-2022 wherein page 27 - regarding - The name & address of the e-bidder to whom the bank proposed the transfer of possessed property" என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், கரிவலம்வந்த நல்லூர் அவர்கள் மனுதாரருக்கு த.அ.,உ.ச.வ.எண்.10/2023, நாள் 24/04/2023 வாயிலாக இனவாரியான பதில் அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர்/மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 02/05/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் அலுவலர்/மாவட்டப் பதிவாளர், தென்காசி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.3983/ஆ1/2023, த.அ.உ.ச.மே.ம.எண்.21/2023 நாள் 09/05/2023 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் 13/05/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 8653/SCIC/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் கோரிய தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 31/07/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், கரிவலம்வந்த நல்லூர் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு த.அ.உ.ச.வ.எண்.10/2023, நாள் 14/11/2024 வாயிலாக பதில் அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை ஆணையத்திற்கும் தெரிவித்துள்ளார். அதன் பின்னர், மனுதாரர் 23/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு தனது ஆட்சேபணை மனுவை அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 05/05/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4. **இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.அ.மாரியப்பன், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கரிவலம்வந்த நல்லூர் அவர்கள் ஆஜரானார். மனுதாரர் 23/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள ஆட்சேபணை மனுவில் தனக்கு, தன்னுடைய 28/03/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரியவாறு இனம் 4-க்கு தகவல் வழங்கப்படவில்லை என்றும், மேலும், உயர்நீதிமன்றம் உத்தரவிட்டவாறு, தான் கோரிய fair hearing விபரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று கோரினார். இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதியால் மனுதாரரின் கோரிக்கைக்கு உரிய பதிலளிக்க இயலவில்லை. எனவே, இவ்வழக்கு 22/05/2025 தேதிய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை (1) மனுதாரர் மற்றும் (2) திருமதி/செல்வி.ரம்யா (பெயரிட்ட உறையில்), சார்பதிவாளர், கரிவலம்வந்த நல்லூர் சார்பதிவகம் ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும்.**

**எனவே, விசாரணையின் போது, திருமதி/செல்வி.ரம்யா, சார்பதிவாளர் அவர்கள் மனுதாரர் இனம்-4-ல் உயர்நீதிமன்ற உத்தரவின்படி கோரியுள்ள fair hearing details தொடர்பான அனைத்து ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் கொண்டு வர வேண்டும் என ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8653/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
கரிவலம்வந்த நல்லூர், தென்காசி மாவட்டம்.பல

**மேல்முறையீட்டாளர்**

திரு. V.கணேசன், W/o. தங்கமாரி கணேசன்
எண்.299 A, M.R.நகர்
இராஜபாளையம் - 626 117
விருதுநகர் மாவட்டம்.

RG/PC